Regd. No. M. 4595.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-

# குடி அரசு

Estd. 1924.

பக்கங்கள் 8. தனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 12-4-1947 பங்குனி மீ 30உ { மலர் 2

## சூத்திரனாயிருக்க வெட்கப்படுகிறேன்

### மறுப்புக் கடிதத்திற்குப் பெரியார் ஈ. வெ. ரா. பதில்

பெரியார் திருச்சி கும்பகோணம் ஆகிய இடங்களில் 'இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து' என்று ஆற்றிய சொற்பொழிவு குறித்துப் பெரியாருக்கு வந்த ஒரு வசவு கடிதத்திற்குப் பெரியார் பதில்.

நண்பரே!

உங்கள் 26-3-47ந் தேதி கடிதம் பார்த்தேன். இதில் உங்கள் ஊர் பேர் போடாததற்கு மன்னியுங்கள். உங்கள் வசை மொழிகளை நான் லட்சியம் செய்து வருந்தவில்லை.

பார்ப்பனீயத்திற்கு நான் பயப்படவில்லை. பார்ப்பனீடம் என்னைப் பிணைத்துக்கொண்டு, தனது கொள்கைக்கு அடிமையாக்கிக்கொண்டிருப்பது மல்லாமல் என்னையும் இந்தக் காலத்திலும் சூத்திரனாக்கி வைத்திருக்கிறதே என்று நான் வெட்கப்படுகிறேன். நீங்களும் சூத்திரப்பட்டத்தைச் சுமக்க இஷ்டப்படாதவர்களானால் வெட்கப்படுங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

நவகாளியில் செத்தவர்களும், வங்காளத்தில் செத்தவர்களும், பஞ்சாபில் மற்றும் வடநாட்டில் செத்தவர்களும் நமக்கு ஒன்றுதான்.

அங்குள்ள இஸ்லாமல்லாதார் பெரிதும் சூத்திரப்பட்டத்திற்கு வெட்கப்படாதவர்கள். கவலைப்பட்டு நாமென்ன செய்ய முடியும். சூத்திரனாக சந்ததி விருத்திச் செய்துகொண்டு வாழ்வதைவிட சூத்திரப்பட்டத்தை ஒழிப்பதற்காகச் சாவது அவ்வளவு மோசமானதல்ல. இனி சூத்திரப்பட்டத்திற்கு இடமில்லாத மார்க்கத்தில் சாவுக்கு இரையாவதும் பெரிய நஷ்டமல்ல.

நான் இஸ்லாத்தில் சேரும்படி யாரைச் சொல்லுகிறேன்? சூத்திரப்பட்டத்தை வெறுக்கிறவர்களையும், சூத்திரப்பட்டத்தால் இழிநிலையில், பிற்பட்ட தன்மையில் இருக்கிறவர்களையும், திராவிட சமுதாயத்திற்கு மான உணர்ச்சி, மனிதத்தன்மை, உணர்ச்சி வேண்டும் என்பவர்களையும்தான் இந்து மதத்தைவிட்டு நம் விருப்பத்திற்கு ஏற்ற இஸ்லாத்தை அல்லது அதுபோன்ற மார்க்கத்தைத் தழுவச் சொல்லுகிறேன். ஆதலால் மற்றவர்கள் பதறவேண்டியதில்லை. வேறு வழி இருந்தால் செய்யுங்கள், காட்டுங்கள். ஏதோ தங்களுக்குச் சரி என்று பட்ட துறையில் வேலைசெய்கிறவர்களைத் திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டு பழிக்காதீர்கள், தடுக்காதீர்கள், தொல்லை கொடுக்காதீர்கள்.

இஸ்லாமானால் வெட்கக்கேடென்ன? இஸ்லாமானால் நீங்கள் யாருக்கு அடிமையாவீர்கள்? இஸ்லாமானால் உங்களை எவன் இழிவுபடுத்த முடியும்? இந்தியாவில் உள்ள 12 கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்களில் 10 கோடி முஸ்லிம்கள் யார்? திராவிடநாட்டில் (சென்னை மாகாணத்தில்) உள்ள சுமார் 50, 60 லட்சம் முஸ்லிம்களில் சுமார் 40 அல்லது 50 லட்சம் முஸ்லிம்கள் யார்? இந்துக்களும், திராவிடர்களுமாய் இருந்தவர்கள் அல்லவா? இப்படிப்பட்ட முஸ்லிம்கள் இப்போது யாருக்கடிமையாய் இருக்கிறார்கள்? அவர்கள் எதற்காக எங்கே வெட்கப்படுகிறார்கள்? சொல்லுங்கள்! காட்டுங்கள்! அவர்கள் சர்க்கார்கோருகிறபடிப் படித்தாலும் படிக்காவிட்டாலும் விகிதாச்சாரத்துக்கு மேலும் உத்தியோகம், ஜெயிலுக்குப் போனாலும் போகாவிட்டாலும் "ஜன[த்தொகை விகி]தத்தில்" விகிதாச்சாரத்துக்குமேல்ப... [ம]ந்திரம், தனித்தொகுதி மூலம் ... [விகிதா]ச்சார பிரதிநிதித்துவம், ஹைகோ[ர்ட்] ஜிலும், சட்டசபைப் பதவி... [எவ்]வளவு சிறிய கமிட்டிகளிலும் ... [விகிதா]சாரம் சரிபங்குபெற்றுச் சரிவ... [வாழ்]கிறார்கள்.

[தி]ராவிடர்களே! (ஆதித்திரா[விடர்களே]!) உங்கள் 'கதி' என்ன? உங்களு[டைய இழிந்த] ஈன நிலைக்கு நீங்கள் இ... [சூத்]திரர்கள் "என்பதைத்தவிர ... [எ]ன் குறை இருக்கிறது? என ... வாய் இருப்பதற்கு வெட்கப்ப... வேதனைப்படாமல் இந்த இழி[வைப் போக்]க உங்கள் உயிரை எப்படிப் ப... [ப]டுத்துவது என்று சிந்திக்காமல் "உன[க்கு] வெட்கமில்லையா" என்று என்னை[க்] கேட்கிறீர்களே! இது நியாயமா? ... [ஆ]னால் (இஸ்லாமாகும்படிச் சொ[ன்னதால்] ... இளைஞர் மனம் என்[மீது வெறு]ப்புக்கொண்டுவிட்டது என் ... [ப]டி எனக்குக் கடிதம் எழுதுகி[றீர்]கள். இந்தக் காலத்து இளைஞர் ... மனம் என்மீது (வெறுப்புக்கொள்ளா ... வெறுப்புக்கொண்டு விடுமானாலுங்கூ[ட] நான் அதற்கு அஞ்சவில்லை. இ... வருங்கால இளைஞர் பாராட்டுவார்க[ள்] ... பாராட்டாவிட்டாலும் இன்று ... சொன்னதைப் பின்பற்றி வீரத்தே[ாடு] மான வாழ்வு வாழும் வழியில் இ... பார்கள். சரியாகவோ தப்பாகவோ நா[ன்] அதில் உறுதிகொண்டு இருப்பதா[ல்] எனக்கு எக்கேடு வருவதானாலு[ம்] சாவு வருவதானாலும் மன[க்] குலைவின்றி நிறைமனதுட[ன்] அனுபவிப்பேன்—சாவேன் என்ப[தை] உண்மையாய் வெளியிடுகிறேன். முத[ல்] முதலில் இஸ்லாத்தைப் போதித்த மு[கம்]மது நபிமீதும் அக்கால மக்கள் வெறு[ப்புக்] கொண்டார்கள். (புத்தர், கிருஸ்[து] மீதும் அன் வெறுப்புக்கொண்டார்கள்.) அப்படி இருக்க ஒரு சாதாரண, வெ[று] சாதாரண மனிதனாகிய நான் அதை[ச்] சொல்லும்போது என்மீதும் வெறுப்பு[க்] கொள்ளுவது என்பது இயற்கைதான். ஆனால் இப்போது "எவராலும்

த்தால் இந்திய மகாத்துமா
வரான காந்தியாரும், சட்
ம் காங்கரஸ் மகாஜனங்களா
ந்திய ஆட்சிக்குத் தலைமைப்
வந்த மகாவீர தீர புருஷர்
எங்கும் முழக்கும்படி செய்யப்
ரான பண்டித ஜவகர்லால் நேரு
ண்மையிலேயே பல நலன்களை
ட்டு சதா மனவேதனை அடைந்து
 பொதுவாழ்வில் உழலும் அறி
ன ராஜகோபாலாச்சாரியாரும்
ல் போற்றப்பட்டாலும் நாளை
அல்லது இன்னும் பல்லாண்டு
 செத்துப்போனால் அவர்களால்
பட்ட வேலை என்ன என்று
— (அவர்களால் எழுதப்பட்ட
ஜிரத்தைவிட உங்களுக்காக
பட்டது என்று குறிப்பிட)
காரியம் இருக்கிறது? இவ்வளவு
ம, இவ்வளவு ஆதரவு, இவ்வளவு
அவர்களுக்கு இருந்தும் உங்கள்
இழி நிலைக்கு அவர்களால் ஆன
ம் என்ன? உயிருள்ளவரையில்
யைக் காப்பாற்றினார்கள் (எதா
மார்) என்பதல்லாமல் மாறுதல்
 வெறும் விளம்பரம் தானே! அது
அவர்கள் கூடவே மயானத்தில்
 வெந்துபோகக்கூடியதுதானே!

சர் அண்ணாமலையாருக்கு
டி, பிர்லாவுக்கு 40 கோடி,
பாத் ராஜாவுக்கு 400 கோடி,
ருக்கும் உலகமெல்லாம் விளம்
 ஆச்சாரியாருக்கு இந்தியாவெல்
புத்திசாலி என்கின்ற பெயர் என்
ன இந்தப் பிரக்யாதி அல்லாமல்
ியாலை என்ன? இதுபோலவே
 இந்துமதத்தையும்பற்றிச் சிந்தித்
ருங்கள். வெள்ளையன்போவ
ங்களுக்கு என்ன மாறிவிட்டது?
மயான இழிவும் இடரும் நீங்
? இஸ்லாமியரைப் பாருங்கள்.
ளையன் போனவுடன் பாக்கிஸ்
 உங்களுக்கோ சூத்திரஸ்தான்.
 நான் சொல்லுவதை நீங்கள்
ல் உங்களுக்கு எவ்வளவு லாபம்?
 பின் சந்ததிக்கு எவ்வளவு
மை? எனக்கும் எவ்வளவு திருப்தி?
ாத்காரமாக பல இந்துக்கள்
மாக்கப்பட்டார்கள்" என்று
இந்துக்கள் முஸ்லிம்கள்மீது பழி
 விஷமப் பிரசாரம் செய்கி
ள்.
ன் பலாத்காரம் செய்கிறேனா?
ுகிறவர்களைப் பலாத்காரத்தால்
ர்களும் அவர் கூலிகளும் தடுக்கி
ன் என்பதல்லாமல் இதன் பொருள்
? இதில் என்னிடம் என்ன
காரமிருக்கிறது? "சிந்தித்துப்
 ஒரு முடிவுக்கு வாருங்கள்!
முடிவு இது" என்று உங்களைக்

இல்லை. பலாத்காரம் செய்ய என்னி டம் ஒரு சக்தியும் இல்லை. இதுவரை இந்தியாவில் உள்ள 10 கோடி இஸ்லா மானவர்களிடமிருந்தாவது அல்லது ஒரு இஸ்லாமானவரிடமிருந்தாவது ஒரு சிறு கூப்பாடு, கூக்குரல்—அதாவது என்னை இஸ்லாமாக்கி கெடுத்துவிட்டார்களே என்றமுறையீடு-வந்ததா? அல்லது எந்த இஸ்லாமானவராவது, காந்தியார் மகன் (அப்துல்லா காந்தி) அல்லாமல் வேறு யாராவது கானாக இஸ்லாத்தில் இரு ந்து இந்துவானார்களா? காந்தியார் மகன்கூட "பணம் வாங்கிக்கொண்டு தான் (பணத்தாசையால்) மறுபடியும் இந்து ஆனார்" என்று அப்போதே சொல்லப்பட்டது.

'சுயராஜ்ய சர்க்காரில் இன்று உங்க ளுக்கு—திராவிடருக்கு நாதி இல்லை. ஆரியன் நிர்ணயசபையில் உங்களுக்கு—(சூத்திரப்பட்டம் வேண்டாம் என்கின்ற திராவிடனுக்கு) கேள்வி கேட்பாரில்லை. ஆசியா உறவு மகாநாட்டில் நீங்கள் ஒரு கூட்டம் இருப்பதாகக்கூடத் தெரியாது. இந்த நிலையில் உள்ள உங்களுக்கு இஸ் லாம் என்றால் சிகப்புத்துணி பறப்ப தைக்கண்ட மாடுபோல் நடுக்கமேன்? பதட்டமேன்? ஆத்திரமேன்? அவதி யேன்?

தோழர் காந்தியார் குரானும்,கீதையும் ஒன்று என்கிறார். 'ராமனுக்குத்தான் ரஹீம்—அல்லா என்கின்ற பெயர்" என்கிறார். "இந்துக் கடவுள் இஸ்லாம் கடவுள் ஒன்றே" என்கிறார். "நான் சதா ராம் ரஹிம் என்று பஜித்துக் கொண்டே இருக்கிறேன்" என்று சொல்லுகிறார். "சாகும்போதும் ராம் ரஹிம் என்று சொல்லிக்கொண்டுதான் உயிர் விடுவேன்" என்கிறார்.

"ராம்—ரஹீம் என்கின்ற பெயர் களைச் சமமாக எண்ணி உச்சரிக்கா விட்டால் நவகாளி இந்துக்கள் மூஞ்சி லும், பீகார் முஸ்லிம்கள் முகத்திலும் நான் எப்படி விழிப்பது" என்கிறார். [இவை 5-4-47ந்தேதி தினமணியில் இருக்கின்றன] இப்படியெல்லாம் இருக்க அதாவது மக்கள் முகத்தில் தற் சிலைகாரியத்திற்காக இஸ்லாமும் இந்து வும் ஒன்றுதான் என்று சொல்லி காங் காஸ் தலைவரே மக்களுக்குப் போதிக் கும்போது ஒரு பெருத்த இழிவு, தடை, நீங்கி மனிதத்தன்மையும், மானமும் பெற்று, பலகோடிக்கணக்கான மக்க ளோடு சகோதரத்தன்மை பெற்று நிரந் தர சமாதானம், நிரந்தர சமத்துவம், நிரந்தர சம உரிமை, நிரந்தர சுதந் திரம் பெறுகிற காரியத்துக்கு அதுவும் உண்மையாக நடக்கிற காரியத்துக்கு இஸ்லாத்தை [ஒரு கடவுள், ஒரு ஜாதி உடன்பிறப்பு உணர்ச்சி] பின்பற்றுங்கள் என்று, அதுவும், மான உணர்ச்சியும் இழிவு வெறுப்பும் உள்ள மக்களுக்குத் தான் என்று நான் சொன்னால் மற்ற மக்கள் ஏன் ஆத்திரப்படவேண்டும் என்று கேட்கிறேன்.

சமீபகாலம்வரை தீண்டாமை விலக வேண்டும், தீண்டத்தகாதவர்கள் என் கின்ற தன்மை மாறவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உடனே இஸ்லா மாக ஆகவேண்டும் என்று சொல்லி 20 வருட காலம் பிரசாரம் செய்து அந்தச் சமுதாயத்தாரையும் ஒப்புக்கொள் ளும்படிச் செய்தேன்.

மலையாளத்திலும் [திருவாங்கூர், கொச்சியிலும்] 1924 முதல் 34 வரை பிரசாரம் செய்து மலையாள ஈழவர் களையும், மற்றும் தீண்டப்படாத மக் கள் என்பவர்களையும் ஒப்புக்கொள்ளச் செய்தேன். இவர்கள் ஒப்புக்கொண்டு தங்கள் மகாநாட்டில் தீர்மானங்கள் செய்து சுமார் மொத்தத்தில் இங்கு 2000, 3000 பேரும் மலையாளத்தில் சுமார் 600, 700 பேர்களும் இஸ்லாத் தைத் தழுவியவுடன் அவர்கள் இழிவுகள் சிறிது சிறிதாக நீக்கப்பட்டு அவர்களது உரிமைகள் இன்று வழங்கப்பட்டுத் தீர வேண்டிய அளவுக்கு வெற்றி ஏற்பட்டு விட்டது. திருவனந்தபுர ஆலயப் பிர வேசம், கொச்சி[எண்ணிக்கைக்கு ஏற்ற] வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எதனால்? இஸ்லாத்தாலா? இந்து தர்மத்தாலா?

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## எங்கள் புத்தாண்டு நற்செய்தியும் நல்வரவும்

★

மேனகா சிலேட்டுகள் கைதேர்ந்த திராவிடத் தொழிலாளர் களால் தயாரிக்கப்பட்டவை. உறுதியிலும் உபயோகத்திலும் மேனாட்டு சிலேட்டுகளைத் தோற்கடிப்பவை.

மேனகா சுதேசி சிலேட் பாக்டரி,
P. B. No. 12, கும்பகோணம்.

## திராவிடர் கழகத் தோழர்களுக்கு

மாணவர் பிரச்சாரக் குழுவினர் மே மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து தமிழ்நாட்டின் பல ஜில்லாக்களிலும் பிரச்சாரம் செய்ய வருகின்றனர். நன்றாய்ப் பேசுந் திறமையுள்ள மாணவர்களையே ஜில்லாவுக்கு இருவர் அல்லது மூவர் வீதம் பிரித்தனுப்பப்படும். திராவிடர் கழகத்தோழர்கள் உள்ள ஒவ்வொரு இடத்திலும் தவறாது இச்சந்தர்ப்பத்தில் கூட்டம் நடத்திக்கொள்ள வேண்டுகிறேன். தோழர்கள் அதிகமாகக் கூட்டங்கள் அமைத்துக் கொடுத்தால்தான் மாணவர்களும் உற்சாகமாகப் பிரச்சாரம் செய்யக்கூடும். ஆண்டு முழுவதும் படிப்புக்காகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உழைத்து அலுத்த மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த அரிய ஒன்று அல்லது இரண்டுமாத ஓய்வு காலத்தில் இனவுணர்ச்சியால் உந்தப்பட்டுப் பிரச்சாரத்திற்குச் செல்ல வருகிறார்களாதலால் அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வது இயக்கத்தோழர்கள் கடமையாகும்.

கூட்டம் அமைக்க விரும்பும் தோழர்கள் கீழுள்ள மாவட்ட பிரசார அமைப்பாளர்களுக்கு உடனே தெரிவித்துக்கொள்ள வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன். 20-4-47க்குள் தெரிவித்துக்கொள்வது நலம்.

முகவரிகள்:

1. சென்னை & செங்கல்பட்டு.
   என். வி. நடராசன்,
   18, பெருமாள் முதலி தெரு,
   பெத்துநாய்க்கன்பேட்டை,
   ஜி. டி., சென்னை.
2. தென்னாற்காடு:
   புலவர் நா. மு. மாணிக்கம்,
   தமிழாசிரியர், ஆர். சி. டி. உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.
3. வடஆற்காடு:
   ஈ. திருநாவுக்கரசு,
   4, ஆகா பசார்,
   வேலூர் (வ. ஆ.)
4. தஞ்சை:
   வி. எஸ். பி யாகூப்,
   விசயபுரம், திருவாரூர்,
5. திருச்சி:
   டி பி. வேதாசலம்,
   வக்கீல், தென்னூர், திருச்சி.
6. மதுரை:
   டி. ஆவுடையப்பன்,
   பணகால் இல்லம்,
   சோழவந்தான்.
7. ராமநாதபுரம்:
   எஸ். எஸ். பழனிசாமி,
   மெயின் பசார்,
   அருப்புக்கோட்டை.
8. சேலம்:
   ஆர். எஸ். அருணாசலம்,
   ஜவுளி வியாபாரம்,
   செவ்வாய்பேட்டை, சேலம்.
9. கோவை:
   என். இ பாலகுரு,
   பட்டக்காரர் பங்களா,
   ஈரோடு.
10. திருநெல்வேலி:
   கே. வி. கே. சாமி,
   62, விக்டர் தெரு,
   தூத்துக்குடி.

இங்ஙனம்: செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம், சென்னை.

### பெயரிடல்

10-3-47ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஆரணிவந்தபோது சைதாப்பேட்டை சேரி என்கிற அரந்தபுரம் தோழர் என். இராமகிருட்டினன் அவர்களின் ஆண்குழந்தைக்குப் பெரியார் அவர்களால் நெடுமாறன் என்று பெயரிடப்பட்டதின் நினைவாக ஒரு ரூபாய் குடியரசுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## மாணவர் பிரசா

### அறிவிப்பு

1-5-47ல் ஈரோட்டில் மா
பயிற்சி வகுப்பு பெரியார்
களால் துவக்கப்பெறும்.
1வாரம் வரை நடைபெறவா
மாணவர்களின் படிப்பு,
சார அனுபவம், பிரச்சார
கலந்துகொள்ளும் காலம்
களை யொட்டி அழைப்பு
பப்படுகிறது. அழைப்பு
மாணவர்கள் யாவரும் தவ
வர வேண்டுகிறேன். மாண
லாத ஒரு சில இளைஞர்களு
பேச்சாளர்களுக்கும் அ
அனுப்பப்படுகிறது.
தோழர்கள் படுக்கை, பே
உடை முதலியவைகளுடன்
தேதியில் புறப்பட்டுவரத் தயா
இருக்கவேண்டுகிறேன்.
பிரச்சாரத்திற்குத் தேர்
கப்படும் தோழர்கள் பிரச்
திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு
மாவட்டங்களுக்குப்பிரித்து அ
பப்படுவார்கள்.

அமைப்பாளர்,
திராவிட மாணவர் பிரச்சாரக்கு
P. B. 325, சென்

---

23-3-47 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு உ
நகரில் தோழர் எம். எஸ். கன
அவர்கள் தலைமையில் 11 செய
விளைக்கொண்ட திராவிடர் க
சிறப்பான முறையில் திறக்கப்பட்

---


வெளிவந்து விட்டது! விற்பனைக்குத் தயார்!!

# இராவணகாவியம்

ஆசிரியர்—குழந்தை.

சிறப்புப்பாயிரம்—கவி பாரதிதாசன் அவர்கள்.
7பக்க ஆராய்ச்சி. முன்னுரை—தளபதி அண்ணாதுரை M A. அவர்கள்.
இராம இராவணப்போர்—ஆரியர் தமிழர் போர் எனும் உண்மை கூறி
இராமாயணத்தால் தமிழர்க்குண்டாகிய இழிவைப்போக்கி, இனவுணர்ச்சி
யூட்டும் சமயச் சார்பற்ற தமிழ்ப்பெருங் காவியம்.

"நான் படித்தறியும்படி பாட்டுக்கள் எளிதாக இருக்கவேண்டும்" என்ற
பெரியார் ஈ. வெ. ரா. சொற்படி அமைந்த எளிய இனிய 2828 தனித்தமிழ்
விருத்தப்பாக்கள். டிம்மி 520 பக்கம்.

உயர்ந்த பதிப்பு. காலிகோ பைண்ட், கண்கவர் அட்டை, விற்பனை
யாளர்க்குத் தக்க கழிவுண்டு. தனிப்பிரதிக்குத் தபால் கூலி 10-அணா.

விலை ரூ. 6.

கிடைக்குமிடம்:—

சிவலிங்க விலாச புத்தகசாலை, ஈரோடு.

குடி அரசு

1947-ஆம் ஏப்ரல் 12உ

## ..ந்தக் கணக்கின் மீது இந்த உத்திரவு?

..ர்க்கார் உத்யோகங்களில் நிய
..ம் செய்வது சம்பந்தமாகப்
..ப்பன மேல் அதிகாரிகள் தங்
..பிரியம்போலத் தங்கள் இனத்
..க்கே சகல பதவிகளையும்
..டுத்துவந்த அக்கிரமச் செய
.. ஒழிப்பதற்காகவே வகுப்பு
.. உத்தியோக நியமனமுறை
..படுத்தப்பட்டது. இது ஏற்
..காலத்தில், 100க்கு 100 பதவி
..ம் பார்ப்பனர்களுக்கே போய்
..மல் தடுப்பது என்ற கருத்
..மட்டுந்தான் கவனிக்க முடிந்
.. தவிர, எல்லா சமுதாயத்
..ும் அவரவர் எண்ணிக்கைக்
.. தக்கவாறு பதவிகளைப் பெற
..ண்டும் என்ற அடிப்படையில்
.. உத்திரவை அமைக்கமுடிய
..லை. இதற்குப்பல காரணங்
.. உண்டு. அவைகளைப்பற்றி
..கு விவரிக்க இடமில்லை.

..இந்த உத்திரவு ஏற்பட்டபிற
..கூட இதை எந்தெந்த மாதிரி,
..ரமாக மீறலாம் என்பதிலே
.. பார்ப்பன மேல் உத்தியோ
..தர்கள் "கண் குத்திப் பாம்
..ப்போல"க் கூர்ந்து நோக்கி,
..யங்களை நடத்திக்கொண்டி
..னர். சமீபத்தில் கூட்டுறவு
..ாகாவில், புதிதாக ஏற்பட்ட
..விகளில் 100க்கு 96பேர்களைப்
..ப்பனராகவே நியமித்தார்,
..னாள் மந்திரி பிரகாசம் என்
.. சட்டசபையில் அம்பலமாக்
..பட்டது.

..இந்தமாதிரி, ஒரே இனத்தார்
..ல உத்யோகங்களையும் கவ்
..கொண்டு போய்விடாமலிருப்ப
..கே வகுப்புவாரி உத்யோக
..மன முறை ஏற்பட்டிருக்கிறது.
..த முறையில் சர்க்கார் சில
..த்தங்களைச்செய்யப் போவ
.. அறிவித்துள்ளனர். இப்புதிய
..த்தத்தின்படி, ஒவ்வொரு 24
உத்தியோகங்களும் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொடுக்கப்படுமாம்:-

| | |
|---|---|
| பார்ப்பனரல்லாதார் | 7 |
| பார்ப்பனர் | 4 |
| முஸ்லிம்கள் | 4 |
| கிருஸ்துவர்—ஆ. இந்தியர் | 4 |
| பிற்பட்ட வகுப்பினர் | 2 |
| ஆதித்திராவிடர் | 3 |

முன்பு "பார்ப்பனரல்லாதார்" என்ற பிரிவிற்கு 12க்கு 5 பதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் பிற்பட்ட வகுப்பினரும் அந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர். இப்போது இவர்களுக்கெனத் தனியாக 2 பதவிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு 12-பதவிகளுக்கு ஒன்றுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. புதிய திட்டத்தின்படி 24க்கு 3 என உயர்த்தியிருக்கின்றனர். 100க்கு 3 எண்ணிக்கையுள்ள பார்ப்பனருக்கு 24க்கு 4, அதாவது 100க்கு 16 பதவிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அக்கிரமத்தை மந்திரிசபையார் கவனித்திருப்பதாகத் தெரியவில்லை. கவனித்துத் திருத்துவார்களென்ற நம்பிக்கையும் நமக்கில்லை. பார்ப்பனருக்கு விகிதத்திற்கு மேற்பட்ட பதவிகள் ஒதுக்கப்பட்டிருப்பதைக் குறைப்பதற்கு, இப்போதுள்ள மந்திரிசபை மட்டுமல்ல, இனி வரப்போகும் எந்தக் காங்கரஸ் மந்திரிசபையும் துணிவு பெறாது என்பது நிச்சயம்.

இனி, பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 2 பதவிகளைப்பற்றி சர்க்கார் செய்துள்ள பெரிய தவறை எடுத்துக் காட்ட வேண்டியது நம் கடமையாகிறது.

யார் யார் பிற்பட்ட வகுப்பினர்? வன்னியர், நாயுடு, கள்ளர், மறவர், அகமுடையார், வண்ணார், நாவிதர், நாடார், கம்மாளர், செங்குந்தர், வாணியர், தெலுங்கு செட்டியார், குயவர், மீன்பிடிப்போர், கவுண்டர், சேனைத் தலைவர்—முதலிய 109 வகுப்பினர் (படிப்பில்) பிற்பட்ட வகுப்பினர் என சர்க்கார் பட்டியல் கூறுகிறது. இங்கே வாசகர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. பார்ப்பனரையும், ஆதித்திராவிடர்களையும், கிருஸ்தவர்களையும், முஸ்லிம்களையும், பிற்பட்ட வகுப்பினரையும் நீக்கிவிட்டால், மீதியுள்ளவர்களே (புதிய திட்டத்தின்படி) "பார்ப்பனரல்லாதார்" என்ற பிரிவின் கீழ் வருகின்றனர்; இவர்கள், சைவ வேளாளர் (பிள்ளை), முதலியார், ரெட்டியார் முதலான 5—6 வகுப்புக்களேயாவர். இவர்களுடைய ஜனத்தொகையையும், பிற்பட்ட மக்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தப் புதிய திட்டத்திலுள்ள அபத்தம் நன்கு விளங்கும்.

உதாரணமாக இம்மாகாணத்திலுள்ள 5 கோடி மக்களில், வன்னியர் 83 லட்சம்; முக்குலத்தார் 75 லட்சம்; நாடார் 25 லட்சம்; கம்மாளர் 36 லட்சம்; செங்குந்தர் 40 லட்சம்; நாயுடு வகைகள் சுமார் 1கோடி; பிரிட்டிஷ் மலபாரிலுள்ள ஈழவர் சுமார் 5 லட்சம். இப்படியே இதர சமூகத்தாரும் லட்சக்கணக்கிலிருக்கின்றனர். எனவே 100க்கு 75 விகிதமுள்ள பிற்பட்ட சமூகங்களுக்கு 24க்கு 2 பதவிகள், அதாவது 100க்கு 8 பதவிகள் ஒதுக்கப்பட்டிருப்பது நியாயமாகுமா? பிற்பட்ட சமுதாயங்களை உயர்த்துவது என்பது இதுதானா என்று கேட்க ஆசைப்படுகின்றோம். இதுமட்டுமல்ல. பிற்பட்ட வகுப்பார் முன்போல "பார்ப்பனரல்லாதார்" என்ற பிரிவில் இணைக்கப்பட்டிருந்தாலும் இனிக் கிடைக்கப்போவதைக் காட்டிலும் அதிகமான உத்யோகங்களைப் பெற முடியும். அதையும் கெடுத்து அவர்களுக்குத் தனிப்பிரிவு என்று ஏற்படுத்தி, 24க்கு 2 பதவிகள் ஒதுக்கப்பட்டிருப்பது மிக மிக அக்கிரமம் என்றே கூறுவோம்.

தாழ்த்தப்பட்டவர்களின் ஜனத்தொகை அதிகமாகியிருப்பதனால் அவர்களுக்கு ஒரு பதவி அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்று இது சம்பந்தமான செய்தி கூறுகிறது. அப்படியானால் பிற்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கையின்படி அவர்களுக்குரிய விகிதத்தை ஒதுக்கிவைப்பதுதானே நேர்மையாகும்? சட்டசபையில் அங்கம் பெற்றிருக்கும் பிற்பட்ட சமூகத்தினர் இந்த முக்கியமான விஷயத்தை அலட்சியப்படுத்தக்

கூடாது. பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பொதுமக்களும் ஆங்காங்கு கூட்டங்கள் போட்டு, சர்க்கார் தவறான உத்தரவைப் பிறப்பிக்காமலிருக்குமாறு செய்ய வேண்டும்.

"இதெல்லாம் அற்பவிஷயம்; உத்தியோக வேட்டைக் கட்சியா, நாம்?' என்றெல்லாம் "உயர்ந்த தத்துவம்" பேசிவந்த நாள் மலையேறிவிட்டது. மந்திரிகளே உத்தியோகவேட்டை என்ற குதிரையின்மீது ஏறித்தான் தோழர் பிரகாசத்தை விரட்டினார்கள்! ஆகலால் இனி வகுக்கப்படவிருக்கும் உத்தியோக நியமன முறையில் பிற்பட்ட சமூகங்களுக்கு—அவர்கள் ஜனத்தொகைக்கு ஏற்றபடி—பதவிகளை ஒதுக்கிவைக்க வேண்டியது சர்க்காரின் கடமையாகும். இதைச் சாதிக்கவேண்டிய பொறுப்பு பொதுமக்களைச் சார்ந்ததே.

## திராவிட மாணவர் எழுச்சி

இவ்வாண்டு மாணவர் பிரசாரம் மிகச் சிறந்தமுறையில் நடத்துவதற்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்கள் செய்த பிரசாரம் பெரும்பயனை அளித்துள்ளது. மாணவர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கிய பிறகுதான் திராவிடர் கழகத்திற்கு மிகுந்த செல்வாக்கு நாட்டிலே ஏற்பட்டுள்ளது என்று கூறலாம்.

குறிப்பாக இவ்வாண்டில் திராவிடர்கழகத்திற்கு மாணவர்களின் ஆதரவு பெரும் அளவில் கிடைத்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். பெரியார் அவர்கள், தான் எங்கு சென்றாலும் அங்கு மாணவர்களின் ஆதரவுதான் மிகுந்துள்ளது என்று அடிக்கடி கூறுவார். திராவிட மாணவர்கள் இப்போது தங்கள் இழிநிலையை யுணர்ந்துவிட்டனர். இழிநிலையை ஒழிப்பதற்கு இனவுணர்ச்சி கொண்டு நாட்டில் கிளர்ச்சி செய்ய அவர்கள் துடியாய்த் துடிக்கின்றனர். அவர்கள் எண்ணம் ஈடேறுங் காலம் மிக அண்மையில்தான் உள்ளது என்பதை

## பெரியார் துலாநிறை புகுவிழா

★

அன்புடையீர்,

வணக்கம். 1947ம் ஆண்டு மே மாதத்தில் திருவத்திபுரத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு, அவர்களின் தொண்டைப் பாராட்டுவதன் அறிகுறியாகப் பெரியாரின் எடை அளவு வெண்பொற்காசுகள், அளிப்பதென முடிவு செய்துள்ளோம். நம் இயக்கத் தோழர்கள் அனைவரும் பொருளும் உழைப்பும் அளித்து இவ்விழாவினைச் சிறப்புற நடைபெறச் செய்யுமாறு உதவி செய்தருள வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

சி. வே. சுப்பராயன்,

தலைவர்.

கா. கோவிந்தன் B.O.L.

வே. சோமு

அமைப்பாளர்.

அவர்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

இன்று பாராளுமன்றத்தில் திராவிட மாணவர்களைப்பற்றிய பேச்சு எழுந்துவிட்டது. திராவிட மாணவர்களின் இன உணர்ச்சியைக் காண ஆரியம் பொறுக்கவில்லை என்பது இதனால் தெற்றெனப்புலனாகின்றது; பொறுக்கவில்லை என்பது மாத்திரமல்ல, அஞ்சவும் செய்கின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கருப்புக்கொடிகள் பறப்பதைக்கண்டு சகஜானந்தம் அஞ்சுகின்றாராம். அவர் ஏன் அஞ்சவேண்டும்? ஆரியர்களன்றோ அஞ்சவேண்டும்? ஆம், அவர் அஞ்சுவதிலும் அர்த்தம் உண்டு. ஆரியர்களின் தாசானுதாசனாகவிருந்ததாலன்றோ சட்டசபையை அவர் எட்டிப்பார்க்க முடிந்தது? அதற்காகப் பார்ப்பனர்களுக்குத் தன் நன்றியைச் செலுத்திக்கொள்ளும் முகத்தான் திராவிட மாணவர்களின் இன உணர்ச்சியைக் குறைகூறுகிறார் போலும்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நாஸ்திகம் பரவுகிறதாம்! ஆஸ்திக ஆஷாட பூபதியாகிய சகஜானந்தத்திற்கு அதனால் பெருங்கவலையாம்! இவர் ஏன் கவலைப்படவேண்டும்? அண்ணாமலை நகருக்கு அண்மையிலுள்ள தில்லையில் உள்ள நடராஜப் பெருமானன்றோ கவலை கொள்ள வேண்டும்? நாஸ்திகம் பரவினால் தனக்கு அழிவு வந்துவிடுமே என நடராஜர் வருத்தப்பட்டாரென்றால் அதில் பொருளுண்டு. ஏன்! நடராஜர் தன் நெற்றிக்கண்ணைக் காட்டி நாஸ்திகம் பரப்பும் மாணவர்களை அழித்துவிடுவதுதானே! இதற்காகச் சகஜானந்தம் சஞ்சலப்படுவதேன்? பாராளுமன்றத்தில் பரிதாபக் குரலில் முகாரி பாடுவதேன்?

இதனால் திராவிட மாணவர்களின் இனவுணர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடலாமென்று கருதுகிறாரா, சகஜானந்தர்? அப்படிக் கருதியிருப்பின் அது அவருடைய அப்பாவித்தனத்தைத் தான் புலப்படுத்துவதாகமுடியும்,

எது எப்படியிருந்தாலும் திராவிட மாணவர்களின் இனவுணர்ச்சித் தீயில் நெய்விட்ட பெருமை சகஜானந்தத்திற்குத்தான்! அதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். நம்மைவிட திராவிட மாணவர்கள்தான் அதிகக் கடமை பட்டுள்ளனர்.

அவருடைய பெருமை இப்போழ்து வேண்டுமானால் அவருக்குத் தெரியாமலிருக்கலாம். அடுத்தத் திங்களில் அவர் மாணவர்கள் மாவட்டந்தோறும் சுற்றுப்பிரயாணம் செய்யும் செய்தியைக்கேட்டு நன்கு உணர்ந்து கொள்வார் என்பது உறுதி. அந்த நேரத்தில் வேண்டுமானால் அவர் ஆத்திரப்படலாம். ஆத்திரப் பட்டுப் பயன்!

எனவே சகஜானந்தம் சட்டசபையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் திராவிட மாணவர்களைப்பற்றிக் குறிப்பிட்டது திராவிட மாணவர்களுக்குப் புத்துணர்ச்சி அளித்திருக்கும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை. அதனால் கடந்த 3 ஆண்டுகளைவிட இவ்வாண்டு மாணவர் பிரசாரம் விறுவிறு

## நெல்லை மாவட்டத்தில்
# பெரியார் ஈ. வெ. ரா.

20-4-47லிருந்து பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கீழ்க்காணும் இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

20-4-47 தூத்துக்குடி (நிதி அளிப்பு விழா)
21— புதியம்புத்தூர்
22— குளத்தூர்
23— கீழஈரால்
24— காயல்பட்டினம்

வேறுபல இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் பெரியாருக்கு தவிர்க்கமுடியாத வேறு வேலைகளிருப்பதால் தள்ளிவைக்கப்பட்டது.

அன்பன்,
கே. வி. கே. சாமி,
செயலாளர்,
நெ. மா. திராவிடர் கழகம்.

---

## பெண் தொண்டர் படை தயாராகுகிறது!

தூத்துக்குடியில் 20-4-47ல் நடைபெற இருக்கும் நிதி அளிப்பு விழாவில் அணிவகுத்துச் செல்லு பெண் தொண்டர்படை தயாராகுகிறது. இயக்கத்தோழர்கள் அனைவரும் தங்கள் தங்கள் வீட்டுப் பெண்மணிகளை அதற்கு ஆயத்தம் செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.

அன்பன்
கே. வி. கே. சாமி,
செயலாளன்,
நெ. மா. திராவிடர் கழகம்,
தூத்துக்குடி.

---

## பதவி வேட்டைக்காரர்களின் ஆட்சி நிலைக்குமா?

பிரகாசம் மந்திரிசபை கவிழ்ந்ததற்குப் பங்காளிச் சண்டையே முக்கியக் காரணம் என்று கூறலாம். அதாவது பதவிவேட்டையேதான் காரணம் என்று கூறலாம்.

பிரகாசம் மந்திரிசபை ஏற்பட்ட காலத்தில் காங்கரஸ் கட்சியிலுள்ள கோஷ்டிகளுக்குப் பதவிகளில் விகிதாச்சாரம் சரிவரக் கொடுக்கப்படவில்லை என்பது பிரகாசம் பதவியிழந்தபின் சட்டசபையில் முகாரி பாடியதிலிருந்து நன்கு புலனாகின்றது. ஒரு கோஷ்டியார் சிபார்சு செய்த ஒருவருக்கு மந்திரிப் பதவி பிரகாசம் பந்துலுகாரு கொடுக்க மறுத்ததாலேயே கோஷ்டிகளுக்குள் முதல் முதலில் தகராறு ஏற்பட்டது என்று பிரகாசம்காருவே பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டார்.

மேலும் ஆகஸ்ட்டு தியாகிகளாகச் சிறைச்சாலைக்குள் இருக்கும்போதே யார்யார் எந்தப்பதவியை ஏற்பது என்ற பிரச்சனை எழுந்ததாகவும் பிரகாசம் கூறியுள்ளார். இதிலிருந்து என்ன புலப்படுகின்றது? காங்கரஸ் கட்சியின் நற்சாட்சி பத்திரம்பெற்ற எல்லா ஆகஸ்ட் தியாகிகளும் பதவி வேட்டைக்காரர்கள் என்பது தெற்றெனப் புலனாகவில்லையா?

மேலும் பிரகாசம் பந்துலுகாரு முதல்மந்திரியாக வந்ததிலிருந்து ஏனையோரைப் பொருட்படுத்தாது காட்டுராஜாபோல் எல்லா செயல்களையும் புரிந்துவந்தார். அதுமாத்திரமன்றி தனது இனத்தவர்களாகிய பார்ப்பனர்களுக்குப் பதவிகளை நேரிடையாகவும், மறைமுகமாகவும் அள்ளி அள்ளி வீசினார். அதிலும் பெரும்பாலும் ஆந்திரர்களையே முக்கியமான பதவிகளில் அமரும்படிச் செய்தார். அதுவுங்கூட பிரகாசம் கோஷ்டியைச் சேர்ந்தவர்களைத்தான் பதவியில் அமர்த்தினாராம்.

இதைக் கண்ணுறும் ஏனைய கோஷ்டியார்களும், ஏனைய இனத்தினரும் பிரகாசத்தின்மேல் பொறாமைகொண்டு ஆத்திரப்படுவது இயல்புதானே? அதனால்தான் அவர்பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று உறுதியாகக் கூறலாம்.

மற்றபடிப் பொதுமக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டதற்காக மற்ற கோஷ்டியினர் பிரகாசத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுபோயினர் என்று கூறுவதற்கில்லை. ஆனால் பொதுமக்களின் வெறுப்பை ஓரளவில் பயன்படுத்தித் தங்கள் காரியத்தைப் பதவி வேட்டைக்காரர்கள் சாதித்துக்கொண்டனர் என்று வேண்டுமானால் கூறலாம்.

இப்போது ஆட்சி மன்றத்தில் முதல் மந்திரியாக அமர்ந்திருக்கும் ஓமந்தூரார் நல்ல சாது என்று பேசப்படுகின்றது. ஆம், சாதுதான். சாதுவாக இல்லாவிட்டால் சட்டசபையையும் புறக்கணித்து மௌனவிரதம் இருப்பாரா? அவர் மௌனவிரதம் இருப்பதைப்பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் சட்டசபையைவிட மௌனவிரதத்தைப் பெரிதாகப் பொருட்படுத்தும் ஒருவர் சட்டசபையில் முதல் மந்திரியாகவிருந்து எப்படி நாட்டு மக்களின் நலத்தைப் பாதுகாப்பார் என்ற ஐயம் எழுகிறது.

ஓமாந்தூரார் மந்திரிசபையிலும் கோஷ்டிகளுக்கு விகிதாச்சாரம் சரிவரக் கொடுக்கப்படவில்லை என்ற பேச்சும் நாட்டில் உலவுகிறது. இப்பேச்சே ஓமாந்தூரார் மந்திரிசபைக்கு ஆபத்தை விளைவிக்குமோவென்றுகூட ஐயப்பட வேண்டியிருக்கிறது. எதற்கும் பொறுத்துப் பார்ப்போம்.

பாகப்பிரிவினையில் மனக்குறை கொண்டவர்கள் மறைமுகமாக வேலை செய்யாமலா இருப்பார்கள்? எல்லாம் இன்னும சிறிது மாதங்களில் புலப்பட்டுவிடும் என்பது உறுதி.

ஆச்சாரியார் முதல்மந்திரியாக வரக்கூடாது என்பதற்குத் தோழர் காமராசநாடார் ஓர் கைப்பாவையாகப் பயன்படுத்தப்பட்டார். அதே காமராச நாடாரைப் பயன்படுத்தித்தான் பிரகாசம் மந்திரிசபையாரையும் கவிழ்க்கப்பட்டது!

ஓமாந்தூரார் முதல்மந்திரியாக வருமட்டும் காமராசநாடாரின் பெயர் அங்கிங்கெனாதபடி எங்கும் அடிபட்டது. ஓமாந்தூரார் மந்திரிசபை வந்ததும் காமராசனின் பெயரையே காணோம். ஓமாந்தூராரின் மந்திரிசபை ஏ

புடன் நடக்கும் என்று துணிந்து கூறலாம்.

எனவே ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்கள் அடுத்த திங்களில் சுற்றுப்பிரயாணம் வரும் மாணவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

பட்டபோழ்து பிரகாசம் மந்திரி சபை ஏற்பட்டபோழ்து உண்டான நிலைமையைப்போல் ஏதாகிலும் ஏற்பட்டதோ என்னமோ? அதனால் காமராசர் மனமுடைந்து சிறிதுகாலம் அஞ்ஞாதவாசம் செய்கிறாரோ என்னமோ? எல்லாம் இன்னும் கொஞ்சநாளில் வெளிச்சமாய்விடும். பொறுத்துப் பார்ப்போம்.

மற்றபடி ஓமாந்தூராரின் மந்திரிசபை எந்தவகையிலும் பிரகாசம் மந்திரிசபையைவிட சிறந்தது என்று கூறுவதற்கில்லை; சிறந்ததாக விருக்கும் என்று எதிர்பார்ப்பதும் தவறு.

பிரகாசம் மந்திரிசபை ஆட்சியில் எந்த அடக்குமுறைச்சட்டம் தொழிலாளர் எழுச்சியைக் கொடுமைப்படுத்தியதோ அதே அடக்குமுறைச்சட்டம் ஓமாந்தூர் ராமசாமிரெட்டியாரின் ஆட்சியிலும் பக்கிங்காம் கர்னாட்டிக் மில் தொழிலாளர்களை அடக்குகிறது. ஓமாந்தூரார் ஆட்சியில் அறிவுக்கு விருந்தாகிய போர்வாள் என்னும் சீர்திருத்த நாடகம் கூட நடைபெறக்கூடாது என்று தடையுத்தரவு எழுந்துள்ளது. இன்னும் என்ன நடக்குமோ? யார் அறிவார்? ஆனால் ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. பதவி வேட்டைக்காரர்களாகிய காங்கரஸ்காரர்களின் ஆட்சியில் பாட்டாளி மக்களுக்கு நன்மை சிறிதளவும் கிட்டாது என்பது உறுதி.

## மதுரை திராவிடர் கழக அங்கத்தினர் கூட்டம்

மதுரை திராவிடர் கழக அங்கத்தினர் பொதுக்கூட்டம் 13-4-47 ஞாயிறன்று காலை 10 மணிக்கு மதுரை லட்சுமிபுரம் குறுக்குத் தெருவிலுள்ள தோழர் கே. ஐ. சக்குனி அவர்கள் இல்லத்தில் நடைபெறும். இதையே அழைப்பாகக்கொண்டு அங்கத்தினர்கள் தவறாது வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
அ. பழனிசாமி,
செயலாளர்,
திராவிடர் கழகம், மதுரை நகர்.

## கிருஷ்ணன்—பாகவதர் அப்பீல் விசாரணை

### 16ந்தேதியில்ஹைகோர்ட்டில் ஆரம்பமாகலாம்

சென்னை, ஏப். 10—

லட்சுமிகாந்தம் கொலைவழக்கு சம்பந்தமாகத் தோழர்கள் என். எஸ். கிருஷ்ணனும், எம். கே. தியாகராஜ பாகவதரும் ஹைகோர்ட் தீர்ப்பை ஆட்சேபித்துப் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல்செய்து கொண்டதும், வழக்கை ஹைகோர்ட்டுக்குத் திருப்பியனுப்புவதாகப் பிரிவுகவுன்சிலில் முடிவு செய்ததும் தோழர்களுக்கு நினைவிருக்கும்.

ஹைகோர்ட் கிரிமினல் வழக்கு ரெடி ஜாபிதாவில் மேற்படி வழக்கு சேர்க்கப்பட்டுவிட்டது. இரண்டு நீதிபதிகள் முன்பு அது விசாரணைக்கு வரும். பார்ட்டிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுவிட்டது.

16-ந் தேதியோ அதற்குப் பிறகோ வழக்கு விசாரணைக்கு வரும். அப்பீலை மீண்டும் விசாரிக்குமாறு மன்னரின் உத்திரவு ஹைகோர்ட்டுக்கு இன்னமும் கிடைக்கவில்லை. அடுத்தவாரத்தில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அது கிடைத்தவுடன் இரண்டு ஜட்ஜுகளின் பெயரும் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படும்.

## கரூர் கலவர வழக்கு விசாரணை

### ஐந்துபேர் விடுதலை

2-4-47 காலையில் திருச்சி பிரத்தியேக முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் தோழர் ஜே. பெரியநாயகம் அவர்கள் முன்னிலையில் கரூர் கலவர வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்த கரூர் தமிழர் சாப்பாட்டு விடுதியின் காரியஸ்தர்களான தோழர்கள் குருசாமி, முத்துசாமி, பழனியப்பன், கந்தசாமி ஆகியோரும், பெட்டிக்கடைத் தோழர் இராமசாமியும் குற்றவாளிகள் அல்லவென்று கோர்ட்டாரால் முடிவு செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

## போர்வாள் நாடகத்திற்குத் தடை

### சென்னை கவர்னர் உத்திரவாம்!

நடிகவேள் தோழர் எம். ஆர். ராதா அவர்களின் நடிகர்குழுவினரால் நடத்தப்பட்டுவரும் சீர்திருத்த நாடகமாகிய 'போர்வாள்' என்னும் தமிழ் நாடகத்தைச் சென்னை மாகாணம் முழுவதிலும் எந்தப் பொதுஇடங்களிலும் நடத்தக்கூடாதெனத்தடைசெய்து சென்னை கவர்னர் உத்திரவு பிறப்பித்துள்ளாராம். 1876ம் ஆண்டு நாடகச் சட்டத்தின் 3வது ஏ. பிரிவுப்படி இந்த நாடகம் நடத்தக்கூடாது என்று கவர்னர் தடையுத்திரவு போட்டுள்ளாராம்.

மக்களுக்கு முழு உரிமையளிப்பதற்காகவே ஆட்சிமன்றம் புகுகின்றோம் என்று சொன்ன காங்கரஸ்காரர்களின் ஆட்சியில் 'மக்கள் பகுத்தறிவு பெறுவதற்குரிய கருத்துக்களையே உருவாகக்கொண்ட சீர்திருத்த நாடகத்திற்குத் தடையாம். இன்னும் எத்தனை நாளைக்கோ இந்த அடக்குமுறைச் சட்டம்?

ஆர்

## கோவை மாவட்ட திராவிடர் கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

கோவை மாவட்டத்தில் நிதி வசூல் டிக்கட் பெற்ற திராவிடத் தோழர்களுக்குப் பலமுறை அறிக்கை விட்டும், கடிதம் எழுதியும் இதுவரையில் நிதி வசூல் செய்து அனுப்பவில்லை. இம்மாதக் கடைசிக்குள் நிதி வசூலை முடித்துப் பெரியாரிடத்தில் நிதி அளிக்க முடிவு செய்திருப்பதால் தயவுசெய்து டிக்கட் பெற்றிருக்கும் தோழர்கள் தங்கள் வசூலை முடித்து இம்மாதம் 25ந் தேதிக்குள் வசூலான தொகையைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

S. R. சந்தானம்,
செயலாளர்,
கோவைமாவட்ட நிதிக்கமிட்டி,
C/o குடியரசு நிலையம், ஈரோடு.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சென்னை சட்டசபையில் ஆலயப்பிரவேச மசோதாவைப் பிரேரேபித்த பார்ப்பனராகிய டாக்டர் ராஜன் என்ன சொல்லிப் பிரேரேபித்தார்?

"இந்து சமுதாயம் நாளுக்குநாள் குறைந்து பலவீனமடைந்து போகாமல் இருப்பதற்கு [இந்து மதத்தைக் காப்பதற்கு] ஆக இந்த ஆலயப்பிரவேச மசோதாவைப் பிரேரேபிக்கிறேன்"

என்று சொன்னாரே ஒழிய, மக்களுக்குக் கடவுள் தரிசனம், கடவுள் பிரார்த்தனை, கடவுள் பிரசாதம் கிடைத்துச் சீக்கிரம் மோட்சம் கிடைக்கவேண்டுமென்றோ, மக்கள் பக்தியால் பாவம் மன்னிக்கப்பட்டு மோட்சத்துக்குப் போகவேண்டுமென்பதற்காகவோ பிரேரேபிக்கிறேன் என்று சொல்லவில்லையே! இதன் அர்த்தம் என்ன? திராவிடர்களை நிரந்தரமாய்ச் சூத்திரர்களாக வைத்து இருக்கச்செய்யும் சூழ்ச்சி தானே இது? கோபிக்கும்—ஆத்திரப்படும்—மொக்கைகளுக்கு இது தெரிய வேண்டாமா என்று கேட்கிறேன்.

சூத்திரன் என்கின்ற பட்டம் இழிவு என்று கருதுகிறவர்களுக்குத்தான் நான் இந்த யோசனை சொல்லுகிறேனே ஒழிய சூத்திரப் பட்டத்தைப்பற்றிக் கவலை இல்லை என்பவர்களுக்கு இதைச் சொல்லுவதில்லை.

சூத்திரப்பட்டத்தைப்பற்றிக் கவலைபடுகிறவர்களையும்கூட சூத்திரப்பட்டம் ஒழிய வேறு வழி இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டுவிட்டுத்தான் நான் இதைச் சொல்லுகிறேனே தவிர மற்றபடி அவசரப்பட்டு ஆணவத்தால் இதைச் சொல்லவில்லை.

ஆகவே ஆத்திரப்பட்டு, வைது கடிதம் எழுதின தோழர்களையும், கடிதம் எழுதாமல் என்னைச் சிறு கூட்டத்தில வைதுகொண்டு விஷமப் பிரசாரம் செய்யும் தோழர்களையும் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

## காரை மாகாண திராவிடர்க் கழக மாநாடு

காரை மாகாண திராவிடர்க் கழக முதலாவது மாநாடு திரவியில் 14-4-47 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேரிக்கு எதிர்புறமுள்ள பன்னீர்ச் செல்வம் திடலில் அமைந்திருக்கும் அர்ச்சுனன் அலங்காரப் பந்தலில், திராவிடத் தலைவர் பெரியார் ஈ. வெ. இரா. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் மு. சிவம் வரவேற்புரை ஆற்றுவார்; தோழர் மு. கருணாநிதி திறப்பு விழா ஆற்றுவார். தோழர் க. அன்பழகன் எம். ஏ. ...

உ. அ. ஹனிபா ஆகிய தோழர்கள் கலந்துகொள்வார்கள்.

அன்று மாலை 7 மணிக்குத் தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா., சு. க. சுப்பராயன், மு. நடேசன் ஆகியோர்

## மதிப்புரை

### தத்துவவிளக்கம்:-

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சேலம் கல்லூரியில் தத்துவக் கலைக் கழகத்தின் சார்பாகத் 'தத்துவ விளக்கம்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவை ஈரோடு நாதன் கம்பெனியார் 'தத்துவ விளக்கம்' என்னும் பெயர் கொண்ட புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். நல்ல காகிதத்தில் அழகான முறையில் பெரியார் பக்க உருவங்கொண்ட சித்திரம் முகப்பில் துலங்க 'தத்துவ விளக்கம்' வெளியிடப்பட்டுள்ளது. தத்துவவிளக்கம் என்பது அரிய பெரிய பொருளைக் குறித்ததானாலும் அஃது எளிய நடையில் எழுதக் கூட்டிப் படிப்போருக்கும் விளங்கும்படி மிக்க தெளிவாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. நுண்ணிய கருத்துக்களடங்கிய பெரிய பொருளை எளிய முறையில் 'தத்துவ விளக்க'த்தில் விளக்கியுள்ளது போன்று வேறு எந்தப் புத்தகத்திலும் விளக்கப்பட்டிருக்கவில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

'தத்துவவிளக்கத்தின் விலை 12 அணா என்றிருப்பது அதிகமென்பதே நமது கருத்து. ஆங்கில ஆசிரியர்கள் அல்லது வேறு புத்தக வியாபாரிகள் தத்துவவிளக்கத்தில் கூறியிருப்பதுபோன்ற அரிய கருத்துக்களடங்கிய புத்தகத்தை வெளியிடுவார்களாயின் அப்புத்தகத்திற்குக் குறைந்தது 2 அல்லது 3 ரூபாய் வரையில் விலை போடுவார்களென்பது உறுதி. என்றாலும் இதுவரையில் பெரியார் அவர்கள் எழுதிய அரிய கருத்துக்களடங்கிய நூல்களின் விலையை நோக்கத் தத்துவவிளக்கத்திற்குப் போடப்பட்டுள்ள விலை அதிகமென்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

இந்நூலை வெளியிட்ட நாதன் கம்பனியார் புத்தக வெளியீட்டுத் தொழிலுக்குப் புதியவர்களானதினாலும், சென்னைசென்று அங்குள்ள உயர்ந்த அச்சகத்தில் கேட்டகூலியைக் கொடுத்து அவசரப்படுத்திப் பலதடவை சென்னைக்குச்சென்று அதிகப்பணம் கொள்முதல் அடங்கும்படிக் செலழித்துவிட்டதாலும் தத்துவ விளக்கத்திற்கு 12 அணா விலைபோட நேர்ந்தது என்பது பிரசுரித்தவர்களின் சமாதானமாகும்.

எப்படியிருப்பினும் ஒவ்வொருவரும் தவறாமல் தத்துவவிளக்கத்தை வாங்கிப் படிக்கவேண்டியது இன்றியமையாதது. படிக்கத்தெரியாதவர்கள் புத்தகம் வாங்கி, படிக்கத் தெரிந்தவர்களிடம் கொடுத்துப் படிக்கக் கேட்கவேண்டுமென்பது நமது ஆசை.

விலை 12 அணா

கிடைக்குமிடம்:-

நாதன் & கம்பனி, ஈரோடு.

## பிறப்பு

திருநெல்வேலி மாவட்டம் ஆதியர் பொருளாதார ஐக்கிய நிலையத்தின் பொக்கிஷதாரர் தோழர் எஸ். எஸ். சாமுவேல் அவர்களின் மனைவியார் தோழியர் வசுமணியம்மாள் அவர்கள் 25-3-47 இரவு 10-30 மணிக்கு ஓர் பெண் மகவு ஈன்றனர், தாயும் சேயும் நலம். அதன் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

---

6-4-47 மாலை 5-30 மணிக்குத் திருநாகேச்சுரம் திராவிடர் கழகத்தின் சார்பில் குடந்தை தளபதி கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுகாலை குடந்தை தோழர் பொன்னுசாமி, ஒரத்தநாடு தோழியர் டி. சி. சாவித்திரி அம்மையார் ஆகியோர் பாடல்கள்பாடினர் விருதுநகர் தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி, பொன்மலை தோழர்கள் டி. கே. சீநிவாசன், புலவர் குழந்தையா, ஜி. பாலங்குசம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கழகச் செயலாளர் தோழர் சி. பி. சாமி நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

---

## காணவில்லை

எனது சகோதரன் சிறிதுகாலமாய்ப் புத்தி சரியில்லாமல் எங்கேயோ போய் விட்டான். அவனைப் பிடித்துக்கொடுப்போருக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும். [உயரம் 5½ அடி, சிவப்புநிறம், நல்ல பாடியாக உள்ளவன், விட்டல் கிராப்பு, வயது 20, பெயர் மாணிக்கம்]

முகவரி:-

நா இராமையா,

சியூஸ் ஏஜண்டு,
தெற்குவீதி, திருவாரூர்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE